நகல்

5.8.1935. சுவாமி உருத்திர கோடீசுவரன்.

நகல் - 1

உ

ஞாயிறு

இல. 8

கலாநிலையம்

5-8-1935

சுவாமி உருத்திரகோடீசுவரர்
அமைச்சர்
'ஞாயிறு' இதழாசிரியக் கழகம்.

அருமை ஐயா

தம்முடைய அருமை பெருமை வாய்ந்த தந்தையார் சென்ற மாதம் 25 ஆந் திகதி எனக்கு எழுதிய கடிதத்தால் இங்கு வருகிற மாதத்தில் நடைபெறவிருக்கும் நல்லைச் சின்னத்தம்பிப்புலவர் 200 ஆண்டுக் கொண்டாட்டத்திலும் தமிழ்ப்புலவர் மகாநாட்டிலும் பிற செயல்களிலும் தலைமை ஏற்றற்கு தம்முடைய கால்நோயினால் இயலாதவராய் இருக்கின்றாரென்பதை அறிந்து நானும் இங்கு அவர்பால் பெருமதிப்புடைய பிறரும் வருந்துகின்றோம்.

ஸ்ரீ ரா இராகவையங்காருக்கு அ. நடேசப்பிள்ளையினால் நேற்றுக் கடிதம் எழுதப்பட்டுத் தம்முடைய தந்தையார் வாயிலாக அனுப்பப்பட்டது நிற்க.

இக்கலாநிலையத்தின் அங்கத்தினருள் ஒருவராய வித்துவான் சுப்பையபிள்ளை என்பார் "தஞ்சைவாணன் கோவை" உரையை (பலஆண்டுகளுக்குமுன் சென்னையில் அச்சிடப்பட்டது) ஓலைச்சுவடிகள் சிலவற்றால் ஆராய்ந்து கொண்டு வருகின்றார். இந்நிலையத்தின்கண் உள்ள மூன்று ஓலைச் சுவடிகளில் இதனோடு சேர்க்கப்பட்டுள்ள தனிக்கடுதாசியில் குறிப்பிட்டவாறு இடையிடையே சிலபகுதிகள் இல. ஆகவே இக்கடிதத்தினைத் தமது தந்தையார்க்கு வாசித்துக்காட்டி அவர் உடன்பட்டால் அவ்விடத்தில் உரைமுற்றுமுள்ள ஓலைச்சுவடியை அன்புடன் ஒருரூபாய் V.P.P.இல் அனுப்புக. இல்லாத உரைப்பகுதிகள் பெயர்த்து எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் மிக்க பொறுப்புடன் தமக்கு அனுப்பிவிடுவேன்.

தமது தந்தையார்பாலும் தம்பாலும்
அன்புடைய
சுவாமி. உருத்திரகோடீசுவரன்

P.S. தமது விரைவான விடையை ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

தஞ்சைவாணன் கோவையுரையில்

1. முதல் 4-ம் செய்யுள் முடிய உரைப்பகுதியில்லை

72 முதல் 144-ம் கவி முடிய

உ

நகல்

34

8 ரு— அ— ௩௬

சுவாமி உருத்திரகோடீசுவரன்

ஞானமூ. ஸ்வாமிகளை

page 407 to 409.

52